கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 176/2017

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 **மணிவேலன்** என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா சொத்து என்பது எனது பள்ளி கூடத்திற்கு தென்புறம், கீழ்புறம், ரோட்டிற்கு வடபுறம், வாதிகளின் இதர சொத்திற்கு மேல்புறம் உள்ளது என்றால் சரிதான். எனது பள்ளி கூடத்திற்கு கிழக்கே சுற்று சுவர் முறையாக எழுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் நினைவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. பி.சா.ஆ.6 நில புல வரைபடத்தில் உள்ளவாறு தான் நான் கிரையம் பெற்ற சொத்தான புல எண்.96/3A உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரனம் சுமார் 49 சென்ட் என்றால் சரிதான்.

2. மேற்படி 49 சென்ட் நிலத்திற்கு தனிப்பட்டா வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். மேற்படி தனிப்பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். பட்டா உள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி தனிப்பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் சர்வே எண்.96/2A, 96/4, 96/3, 96/2B, 96/5A சேர்ந்து நான்கெல்லை காண்பித்து ஏக்கர் 4.31 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி சர்வே எண்கள் அனைத்தையும் காண்பித்து ஒரே நான்கெல்லையாக மேற்படி பி.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.96/3ற்கு தனியாக நான்கெல்லை காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் செய்துள்ள புல வரைபடத்தில் உள்ளது போல் சர்வே எண்.96/3Aற்கு தென்புறம் சர்வே எண்96/3B உள்ளது என்றால் சரிதான். ரோடாக உள்ளது. சர்வே எண்.96/3A மேல்புறத்தில் கிழமேல் ரோடு

உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி கிழமேல் ரோடானது சர்வே எண்.96/3A ற்கு பக்கத்தில் வந்து தென்புறம் சென்று கீழ்புறமாக மீண்டும் செல்கிறது என்றால் சரிதான். எனது பள்ளியின் மெயின் வாசல் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண் தெரியாது. எனது பள்ளியின் மெயின் வாசல் கிழமேல் ரோட்டை ஒட்டி வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். எனது பள்ளியின் மெயின் வாசலின் வழியாக மாணவர்கள் மற்றும் நாங்கள் வந்து செல்வதை வாதி தடுக்கவில்லை என்றால் சரியல்ல. இடையூறு செய்தார்கள். மேற்படி இடையூறு நடந்திருந்தால் நான் தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான்.

5. நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கின் எண் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு எனது பள்ளிக்கு கீழ்புறம் மற்றும் தென்புறம் உள்ள சொத்தை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.96/3B ற்கு தங்கராஜ் மனைவி வேம்பு என்பவர் பெயரில் வா.சா.ஆ.2 பட்டா உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது பள்ளி மாணவர் விடுதி என்றால் சரிதான். மேற்படி மாணவர் விடுதியை ஒட்டி உள்ள கிழக்கே உள்ள தாவா சொத்தில் தான் நாங்களும், எனது மாணவர்களும் குப்பைகளை கொட்டியுள்ளோம் என்றால் சரியல்ல.

6. பேப்பர் சாக்பீஸ் போன்ற பொருட்கள் இருக்கலாம். ஆனால் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது போல் குப்பைகள் எதுவும் எங்கள் பள்ளி மாணவர்களால் போடப்படவில்லை. மேற்படி புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள குப்பைகள் விவசாய நிலங்களுக்கு தீங்கு விளைவிக்ககூடிய குப்பைகள் என்றால் புகைப்படத்தில் உள்ள குப்பை என்ன வகையானது என்று எனக்கு தெரியாது. வாதி எங்கள் பள்ளி நிர்வாகத்தில் அதிக முறை மேற்படி குப்பைகள் எதுவும் அவரது நிலத்தில் போடக்கூடாது என்று முறையீட்டுள்ளார் என்றால் அதிக முறை பிரச்சனை செய்துள்ளார். புகைப்படத்தில் உள்ள குப்பைகள் அனைத்தும் மாணவர்கள் பயன்டுத்தி எறியப்பட்ட மருந்து பாட்டில்கள் என்றால் சரியல்ல.

7. எண்ணெய் பாட்டில் மற்றும் நெகிழி பொருட்களாக உள்ளது. மேற்படி புகைப்படத்தில் பல் துலக்கும் பிரஷ் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கழிவுகளை கொட்டுவதால் வாதியால் விவசாயம் செய்ய

முடியவில்லை என்றால் சரியல்ல. அதிக முறை நாங்கள் வாதி கேட்டுக்கொண்டதின் பேரில் குப்பைகளை அப்புறப்படுத்தி சுத்தம் செய்து கொடுத்துள்ளோம். பள்ளி விடுதிக்கு கீழ்புறம் உள்ள நிலம் வாதிக்கு சொந்தமான நிலம் என்றால் சரிதான். வாதி ஒவ்வொரு முறையும் எங்களிடம் சொல்லி சுத்தம் செய்த பின்பும் தொடர்ச்சியாக குப்பைகளை கொட்டி இடையூறு செய்ததால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. வாதி விவசாயம் செய்வதை இடையூறு செய்வதால் தான் இவ்வழக்கு ஏற்பட்டுள்ளது என்றும், வாதி இடத்தில் குப்பை கொட்டவோ, வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யவோ எங்களுக்கு எவ்வகையான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**